ஸ்ரீ

அழகியமணவாளதாசர் Acc NO. 2847

என்கிற திவ்வியகவி

பிள்ளைப்பெருமாள்ஐயங்கார்

அருளிச்செய்த

திருவேங்கடமாலை

மூலபாடம்.

ரு-ம் பதிப்பு

289 THUMBOO CHETTY ST MADRAS

இஃது

ஊ - புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1890.

ஸ்ரீராமஜயம்.

திருவேங்கடமாலை.

நான்முகம்.

திண்பார் புகழுந் திருவேங் கடமாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக் - கண்பாராய்
நாரா யணனடியே னுடேந் தமிழ்வேத
பாரா யணசடகோ பா. (க)

மூலமே யென்றகரி முன்வந் திடர்தொலைத்து
நீலமே கம்போல நின்றானைப் - பாலாய
வேலைநடு விற்றுயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய். (உ)

ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடமென்
றாழ்வான புன்சொல்லுந் தாங்குமா - லேழ்பாரும்
வெல்லுங் கதிர்மணியும் வெம்பரலுஞ் செஞ்சாந்தும்
புல்லும் பொறுத்தமையே போல். (ங)

நூல்.

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே - மன்னும்
பரமபத நாட்டினான் பையரவின் சூட்டிற்
சிரமபத நாட்டினான் சேர்பு. (க)

சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே - போதி
லிருப்பாற் கடலா ளிபமூர்ந்தார்க் கெட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு. (உ)

மாலைக்கோ வித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே - சோலைத்
தருமா தரைநட்டான் றன்முல்லை யாயர்
தருமா தரைநட்டான் சார்பு. (௩)

நாலு திசைமுகமு நன்னுதலா லோன்கமல
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே - சாலுறையு
மன்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனு
ளன்மயக்கந் தேற்றுவித்தா னூர். (௪)

பாணிபிறை கொன்றை பணிசூடி மானேந்தி
வேணியர னெப்பொருவும் வேங்கடமே - யாணிநிறப்
பீதாம் பரனார் பிரமர்வா மூண்டங்கண்
மீதாம் பரனார் விருப்பு. (௫)

மாலாய்ச் சசிதழுவி வச்சிரமேந் திப்புகர்மா
மேலாய்ப் புரந்தரனாம் வேங்கடமே - காலாய்க்
கிளர்வாகு மந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்
தளர்வாகு மந்தரத்தான் சார்பு. (௬)

வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே - யுள்ளினரைத்
தங்கமலப் பார்வையான் றன்னடியார் மேல்வைக்குஞ்
செங்கமலப் பார்வையான் சேர்பு. (௭)

புள்ளரவ நீரவம் போர்மா வரவமரு
வெள்ளரவ வெற்பாகும் வேங்கடமே - யொள்ளரியா
மாகனகம் பத்தினர் வாய்கன்கை யுந்திபதந்
கோகனகம் பத்தினர் குன்று. (௮)

துய்யசெம்பொற் கோயிற் சுடரோதிப்பக் கண்முகிழ்த்து
வெய்யவன்றேர் மாவிடறும் வேங்கடமே - யையிருநா

ருனமுகப் பாம்பணையா ரானிரைப்பி னூதிவரும்
கானமுகப் பாம்பணையார் காப்பு. (௯)

மாண்டுபிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரு
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே - பாண்டுமக
னேறிரதப் பாகனு ரேத்துமடி யார்நாவி
னூறிரதப் பாகனு ரூர். (௧0)

கோலியொரு நான்கு குலமறையு நாற்றிசையும்
வேலியென நின்றேத்தும் வேங்கடமே - வாலிதனை
நன்பாவை யாதரித்தான் ஞானமுத லாழ்வார்கள்
வெண்பாவை யாதரித்தான் வெற்பு. (௧௧)

தெள்ளியதோர் வீடருளுஞ் சீர்கேட்டுப் பொன்மலையும்
வெள்ளிமலை யும்பணியும் வேங்கடமே - புள்ளின்
கொடிவாக னத்தான் குளிர்ந்திருண்ட காரின்
வடிவாக னத்தான் வரை. (௧௨)

எப்பூ தலமு மிறைஞ்சித் திசைநோக்கி
மெய்ப்பூ சனைபுரியும் வேங்கடமே - கொப்பூ
ழிலகுமுண்ட கந்தரத்தா னின்றளிக்கு மீரே
ழுலகுமுண்ட கந்தரத்தா னூர். (௧௩)

நோவினையு நோயினையு நோய்செய் வினையினையும்
வீவினையுந் தீர்த்தருளும் வேங்கடமே - மூவினைசெய்
மூவடிவாய்ப் பச்சென்றான் முன்னா ளகலிகைக்குச்
சேவடிவாய்ப் பச்சென்றான் சேர்பு. (௧௪)

பித்துமல மைமுடம் பேய்குருடு கூன்செவிடு
மெய்த்துயர்நோய் தீர்த்தருளும் வேங்கடமே - பத்தருக்கு
வந்ததுக்கங் காப்பான் மலருந் தியினுலகந்
தந்ததுக்கங் காப்பான் றலம். (௧௫)

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே - கூடத்துக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்குஞ்
செம்பவள மாவென்றான் சேர்பு. (கசு)

தாவிவரும் வானரங்க டன்குவட்டிற் கற்கடக
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே - காவிரிசூழ்
பொற்றிருவ ரங்கத்தான் போதன் சிவனென்று
மற்றிருவ ரங்கத்தான் வாழ்வு. (கஎ)

ஒண்சிக் தாத்தைவெறுத் தூடும் பிடிவேழம்
விண்சிங்கங் கண்டணைக்கும் வேங்கடமே - யெண்சிர்த்தைக்
கோரா விருந்தா னொருநாள் விதுரனுக்கு
வாரா விருந்தான் வரை. (கஅ)

மாதுமடக் கன்னிகழை வந்தணுகிக் கம்பத்தின்
மீதாடிப் பாளொக்கும் வேங்கடமே - பூதுகுழற்
பாலன்பா னாக்குவித்தான் பஞ்சவர்க்காய் நூற்றுவரைக்
காலன்பா லாக்குவித்தான் காப்பு. (ககூ)

மன்று குடிக்குறவர் வாணார் தலாத்திடையே
மின்று மணிசிறுக்கும் வேங்கடமே - யென்று
னரவிந்தப் போதகத்தா னன்பா லழைத்த
கரவிந்தப் போதகத்தான் காப்பு. (உ0)

கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே - கல்லை
யரிவைவடி வாக்கினா னன்னமாய் வேத
விரிவைவடி வாக்கினான் வெற்பு. (உக)

தேனேறித் தேன்வைக்குந் திண்கழைமேல் விண்மகர
மீனேறி வேள்கொடியாம் வேங்கடமே - வானேறித்

திமுகனு கந்திருப்பார் சேவடிக்கா ளானவரைக்
காமுகனு கந்திருப்பார் காப்பு. (௨௨)

ஒண்கொம்பிற் றேனிரு லூர்பிறைக்கோட் டாலுடைந்து
விண்கும்ப வாய்சிறைக்கும் வேங்கடமே - வண்கும்ப
கம்பத்தா னைக்கடுத்தார் காராக்கர் போர்மாளக்
கம்பத்தா னைக்கடுத்தார் காப்பு. (௨௩)

கூனலிள வெண்குருகு கோனேரி யில்விசும்பூர்
மீனநிழ லைக்கொத்தும் வேங்கடமே - கானகத்துப்
பொன்னு ருழையெய்தார் பூங்கழலே தஞ்சமென
வுன்னு ருழையெய்தா ரூர். (௨௪)

மன்மூலந் தாவென்று மந்திகடு வற்குரைப்ப
விண்மூலங் கேட்டேங்கும் வேங்கடமே - யொண்மூல
வேதத் திருக்குழையார் வெய்யோ னிரண்டனைய
சீதத் திருக்குழையார் சேர்பு. (௨௫)

நாலவிட்ட பொன்னூச னன்னுதலா ருந்துதொறு
மேலவிட்டந் தொட்டிழியும் வேங்கடமே - யாலமிட்ட
பொற்புக் களங்கறுத்தார் போர்சரிய வாணன்றோள்
வெற்புக் களங்கறுத்தார் வீடு. (௨௬)

பானிறங்கொ டெங்கிளம் பாளைவிரி யச்சுனையின்
மீனினங்கொக் கென்றொளிக்கும் வேங்கடமே - வானிமிர்ந்த
வெள்ளத்துக் கப்பாலான் மெய்ப்பரம யோகியர்த
முள்ளத்துக் கப்பாலா னூர். (௨௭)

கொம்பணியுந் தேமாங் குயில்கருடன் போற்கூவ
வெம்பணிகள் புற்றடையும் வேங்கடமே - வம்பணியும்
விண்ணினைந்து காப்பார் மிசைவைத்தார் பத்தனைத்த
முண்ணினைந்து காப்பா ருவப்பு. (௨௮)

தெங்கிளநீர் விழச் சிதறுமணி யைக்கரிகள்
வெங்கனலென் றஞ்சிப்போம் வேங்கடமே - பைங்கழையின்
மாண்டானைப் பண்டழைத்தார் மாமறையோன் பாற்றோன்றி
மாண்டானைப் பண்டழைத்தார் வாழ்வு. (௨௯)

அங்கயலின் மேக மதிரப் பெரும்பாந்தள்
வெங்கயமென் றங்காக்கும் வேங்கடமே - பங்கயனோ
டம்பு வனங்கடந்தா ரம்புயத்து மங்கையொடு
வெம்பு வனங்கடந்தார் வெற்பு. (௩௦)

திங்களிறு மாந்துலவத் திம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே - பொங்கமரி
லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று. (௩௧)

அம்புலியில் வாழ்மா னதிருங் குரற்பகுவாய்
வெம்புலியைக் கண்டேங்கும் வேங்கடமே - நம்புமெனை
வீங்கூத்தைக் கண்டிருப்பார் விண்ணோர் நரர்பிறந்து
சாங்கூத்தைக் கண்டிருப்பார் சார்பு. (௩௨)

கண்ணால் வெடித்த கழைமுத்தங் கார்தொளைத்து
விண்ணாலி யோடுதிரும் வேங்கடமே - யெண்ணார்
கலங்கவரு மஞ்சனையார் கான்முளையை யூர்ந்தார்
சலங்கவரு மஞ்சனையார் சார்பு. (௩௩)

செல்லுக்கு மேற்செல்லுந் திண்ணியவேய் வாசவனார்
வில்லுக்கு வாளியாம் வேங்கடமே - யெல்லுக்கு
ளந்தகா ரம்படைத்தா ராரழல்வா யம்பினால்
வெந்தகா ரம்படைத்தார் வெற்பு. (௩௪)

பொன்கமழுங் கற்பகத்தின் பூங்கா வனத்துக்கு
மென்கமுகங் காலாகும் வேங்கடமே - நன்கமரு

மூரத் திகிரியா ருதுந் திகிரியார்
வீரத் திகிரியார் வெற்பு. (௩௫)

தண்ணிலைக்கன் மூங்கிற் றலைதொடுத்த தேனிறால்
விண்ணிலைக்கண் ணாடியாம் வேங்கடமே - யுண்ணிலைக்குஞ்
சோதி வணங்கரியார் தூயசன காதியரு
மோதி வணங்கரியா ரூர். (௩௬)

தண்கமுகின் பாளை தடங்கதிரின் செல்வனுக்கு
வெண்கவரி போலசையும் வேங்கடமே - யொண்கடல்சூழ்
வண்டுவரை நாட்டினான் மத்தாக வாரிதியுட்
பண்டுவரை நாட்டினான் பற்று. (௩௭)

அங்கதிருங் கான்யாற் றடர்திவலை யானனைந்து
வெங்கதிருந் தண்கதிராம் வேங்கடமே - செங்கதிர்வேற்
சேந்தனத்த மைந்தான் றிருத்தாதை விற்கிளையாள்
பூந்தனத்த மைந்தான் பொருப்பு. (௩௮)

சேணுலவு திங்களெனுஞ் சித்தசவேள் வெண்குடைக்கு
வேணுவொரு காம்பாகும் வேங்கடமே - கோணுமனத்
தென்னையா ளாகத்தா னின்னருள்செய் தான்கமல
மின்னையா ளாகத்தான் வெற்பு. (௩௯)

தேவருடை யைந்தருவின் செந்தே னிறால்கிழிய
மீவருடை பாய்கின்ற வேங்கடமே - மூவடிமண்
போயிரந்தா ரத்தார் புனையு மொருபதினு
ராயிரந்தா ரத்தா ரகம். (௪0)

வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே - நன்குறிஞ்சிப்
பேய்த்தனஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு
வாய்த்தனஞ்சு வைத்தார் வனம். (௪௧)

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே - தாவுகடல்
வேகவிலங் கைக்கொண்டார் வீடணனை வைத்தொழிந்தார்
சாகவிலங் கைக்கொண்டார் சார்பு. (சஉ)

வெள்ளியகன் மீதே விடர்முளைத்த செங்காந்தள்
வெள்ளி யகல்விளக்காம் வேங்கடமே - வெள்ளியெனும்
வேதியனுட் டங்கெடுத்தார் மேதினியைப் பாதலமென்
றோதியனுட் டங்கெடுத்தா ரூர். (சங)

அல்லிமலர்க் காந்தளின்மே லாடுஞ் சுரும்பினங்கள்
மெல்லியர்கள் கைக்கழங்காம் வேங்கடமே - மல்லினைப்
பண்டறைந்த வன்புடையார் பார்த்தனுக்குத் தத்துவரால்
விண்டறைந்த வன்புடையார் வெற்பு. (சச)

காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே - பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மே
லூன்மடங்கா மார்வத்தார் நாடு. (சரு)

நாகத்தின் மேற்குறவர் கன்கெறிந்த மாணிக்க
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே - மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து
காத்தாண்ட மண்டலத்தார் காப்பு. (சசு)

செம்பதும ராகச் சிலைசூழ் பெரும்பாந்தள்
வெம்பரிதி யூர்கோளாம் வேங்கடமே - யும்பருல
கோதத்தி னப்புறத்தா னோரா லிலைதுயின்றான்
வேதத்தி னப்புறத்தான் வெற்பு. (சஎ)

கோலமணிப் பாறையிற்பாய் கோடரங்கள் செங்கதிரோன்
மேலனுமன் பாய்ந்தனைய வேங்கடமே - நாலுமறை

யாய்ந்தபர தத்துவந்தா னுனுன் குடமாடல்
வாய்ந்தபர தத்துவந்தான் வாழ்வு. (சஅ)

கொம்பினிருல் வாங்கிமிர் குஞ்சரக்கை யம்புலிமேல்
வெம்பியெழுங் கோளரவாம் வேங்கடமே - தும்பிபல
போர்காது மீர்ந்தார் புனையரக்கி மூக்கிறெடும்
வார்காது மீர்ந்தார் வரை. (சகூ)

வண்மைதிகழ் வெண்பளிங்கு வட்டத்திற் கண்டுயின்மான்
விண்மதியின் மனையக்கும் வேங்கடமே - யொண்மதியா
னூலைத்தா மோதரனுர் நோக்கவரி யார்துளவ
மாலைத்தா மோதரனுர் வாழ்வு. (ருo)

சிலேடைகள்.

காதலிற்றுச் சார்ந்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே - போதகத்தை
மோதி மருப்பொசித்தார் முன்பதினு ருயிரவ
ரோதி மருப்பொசித்தா ரூர். (ருக)

கேள்வித் துறவோருங் கேடறவில் வாழ்வோரும்
வேள்விக் கினமாற்றும் வேங்கடமே - மூள்வித்து
முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதமுடித்தார் வாழ்வு. (ருஉ)

பொய்யாம் வினையேனைப் போல்வாரு மன்பருஞ்செய்
மெய்யாம் வழுத்தேயும் வேங்கடமே - செய்யா
டனத்துவசப் பொற்புள்ளார் தானவனா மோதஞ்
சினத்துவசப் பொற்புள்ளார் சேர்பு. (ருங)

கோடலிலா வுள்ளத்துக் கோதி லடியவரும்
வேடருமங் கைவளைவெல் வேங்கடமே - மூடர்
மனமா மனைக்கொன்ருர் வன்கஞ்ச னென்னுஞ்
சினமா மனைக்கொன்ருர் சேர்பு. (ருச)

மொய்வதன மங்கையர்கள் முன்கையும் யோகியர்கள்
மெய்வயது மஞ்சகமார் வேங்கடமே - பெய்வளையார்
பாற்றிருப்பா தஞ்சிவந்தார் பற்றினர் புன்பிறப்பை
மாற்றிருப்பா தஞ்சிவந்தார் வாழ்வு. (௫௫)

இல்லக் குறத்தியரும் யாக்கைநிலை வேட்டவரு
மெல்லக் கிழங்கெடுக்கும் வேங்கடமே - நல்ல
புதுப்பூவை வண்ணத்தான் போர்முகத்துச் செவ்வாய்
மதுப்பூவை வண்ணத்தான் வாழ்வு. (௫௬)

தேனியலுங் கூந்தலார் செங்கரமு மாதவத்தோர்
மேனியுமை யம்பொழியும் வேங்கடமே - ஞானியர்க [ணெய்
டாங்குறிபெட் டக்கரத்தார் தாளூரன்மேல் வைத்துவெண்
தாங்குறிபெட் டக்கரத்தார் சார்பு. (௫௭)

காணியிலார் சொற்கேட்ட கந்திருவ ருந்தவரும்
வீணையிரா கத்தைவிடும் வேங்கடமே - சோணை
யிருங்குன்டை யோட்டினு னேற்பொழித்தான் கூனி
மருங்குன்டை யோட்டினன் வாழ்வு. (௫௮)

முந்நூன் மறையவர்கா மூதரம்பை மாரினடு
மெய்ந்நூ னலங்கவரும் வேங்கடமே - பொய்ந்நூலா
லச்சமயக் கத்தினு ராதரிக்கத் தெய்வங்கள்
வைச்சமயக் கத்தினர் வாழ்வு. (௫௯)

ஓதுமறை யோர்புறமு முள்ளுங் கலையினரு
மேதையக லாவிருக்கும் வேங்கடமே - கோதைகுழல்
சுற்றுத தாரணியார் துயதிருத் தாளூன்றப்
பற்றுத தாரணியார் பற்று. (௬௦)

கன்முலைபோல் வெண்ணகையார் நாயகர்மேல் வைத்தநெஞ்சு
மென்முலையுங் கற்புரஞ்சேர் வேங்கடமே - முன்மலைந்து
தோற்றமா ரீசனுர் தோற்றமா யம்புரியச்
சிற்றமா ரீசனுர் சேர்பு. (௬௧)

கூறுங் கிளிமொழியார் கொங்கையென்றுங் கண்ணென்றும்
வீறு மருப்பிணைசேர் வேங்கடமே - நாறுந்
துளவமலர்க் கண்ணியார் தொண்டாய்த் தமக்கன்
புளவமலர்க் கண்ணியா ருர். (கூ௨)

மாதரம்பொன் மேனி வடிவு மவர்குறங்கு
மீதரம்பை யைப்பழிக்கும் வேங்கடமே - பூதமைந்தின்
பம்பரமா காயத்தார் பாடினால் வீடருளு
நம்பரமா காயத்தார் நாடு. (கூ௩)

கோள்கரவு கற்றவிழிக் கோதையர்கள் பொற்றோளும்
வேள்கரமு மம்பஞ்சார் வேங்கடமே - நீள்கானார்
தூடணனார் முத்தலையார் தஞ்சவெய்து தஞ்சானைக்
கூடணனார் முத்தலையார் குன்று. (கூ௪)

கோங்கைக்கோ டேறிக் குலுக்குமரி யுங்கரியும்
வேங்கைக்கோ டாதரிக்கும் வேங்கடமே - பூங்கைக்குண்
மெய்த்தவளச் சங்கெடுத்தார் மேகலைவிட் டங்கைதலை
வைத்தவளச் சங்கெடுத்தார் வாழ்வு. (கூ௫)

மாவிற் குயிலு மயிலு மொளிசெய்ய
மேவிப் புயறவழும் வேங்கடமே - யாவிக்கு
ளானவரு டந்தடுத்தா ரானிரைக்காக் குன்றேந்தி
வானவரு டந்தடுத்தார் வாழ்வு. (கூ௬)

கானே டருவி கனகமுமுத் துந்தள்ளி
மீனே வெனக்கொழிக்கும் வேங்கடமே - வானோர்கள்
மேகனைய னங்கொண்டார் வேணியரன் காண்பரியார்
காகனைய னங்கொண்டார் காப்பு. (கூ௭)

கண்டடைந்த வானவருங் காந்தட் குலமலரும்
விண்டவிர்ந்து நிற்கின்ற வேங்கடமே - தொண்டருக்கு
வைகுந்த நாட்டான் மருவுருவ மீந்துவைக்கும்
வைகுந்த நாட்டான் வரை. (கூ௮)

வாழும் புலிபிறொடு வானூர் தினகரனும்
வேழங்க ளும்வலஞ்செய் வேங்கடமே - யூழின்கட்
சற்று மிறுமினியான் சாரா வகையருளு
நற்று மிறுமினியா னுடு. (௬௯)

நாட்கமலப் பூஞ்சுனைக்குஞ் சாயகங்கள் கொய்துதிரி
வேட்கும் வடிவில்லா வேங்கடமே - வாட்கலிய
னலியப்பாம் பாட்டினார் நச்சுமடு வைக்கலக்கித்
தாலியப்பாம் பாட்டினார் சார்பு. (௭0)

ஆயுக் துறவறத்தை யண்டினமுந் தண்டினரும்
வேயுங் கிளைவிட்ட வேங்கடமே - தோயுந்
தயிர்க்காத்தாங் கட்டுண்டார் தாரணியிற் றந்த
வுயிர்க்காத்தாங் கட்டுண்டா னூர். (௭௧)

தொண்டொடுமெய் யன்புடையார் தூய்மனமுஞ் சந்தனமும்
விண்டொடுபொற் பாம்பணைசேர் வேங்கடமே - தண்டொடுவா [ள்
கோலமருங் கார்முகத்தார் கோடாழி யார்குழையின்
கோலமருங் கார்முகத்தார் குன்று. (௭௨)

இட்டுநெறி யோகியருங் கிள்ளைகளுந் தங்கூடு
விட்டுமறு கூடடையும் வேங்கடமே - யெட்டுமெத
மாவென்று வந்தான் வரநாளை வாவின்று
போவென்று வந்தான் பொருப்பு. (௭௩)

மட்டுவளர் சாரலினு மாதவத்தோர் சிந்தையினும்
விட்டுமெதி விளங்கும் வேங்கடமே - கட்டுசடை
நீர்க்கங்கை யேற்றா னிரப்பொழித்தா னீள்குறளாய்ப்
பார்க்கங்கை யேற்றான் பதி. (௭௪)

புக்கவரு மாதவரும் பூமதுவுண் வண்டினமு
மெய்க்கவசம் பூண்டிருக்கும் வேங்கடமே - யொக்கவெனை
யன்பதினா லாண்டா ரரிவையொடேங் கானுறைந்த
வன்பதினா லாண்டார் வரை. (௭௫)

தக்கமறை யோர்நாவுந் தன்சார லின்புடையு
மிக்க மனுவனையும் வேங்கடமே - யக்கரவம்
பூண்டார்க்கு மாறுடைத்தார் பொங்கோத நீரடைத்து
மீண்டார்க்கு மாறுடைத்தார் வெற்பு. (எசு)

நீடு கொடுமுடியு நீதிநெறி வேதியர்கள்
வீடு மகமருவும் வேங்கடமே - கோடுங்
கருத்துளவ மாலையார் காணும ணின்ற
மருத்துளவ மாலையார் வாழ்வு. (எஎ)

சீதங்கொள் சாரலினுஞ் சேர்மறையோ ரில்லிடத்தும்
வேதங்க ளுல்வளரும் வேங்கடமே - போதன்
சிரித்துப் புரந்துடைத்தான் றேவரொடு மண்டம்
விரித்துப் புரந்துடைத்தான் வெற்பு. (எஅ)

நன்கோடு போலுமுலை நாரியருஞ் சண்பகத்தின்
மென்கோடுங் கற்பகஞ்சேர் வேங்கடமே - வன்கோடு
கூரிருவ ராகனுர் கோகனகை பூமியென்னு
மோரிருவ ராகனு ரூர். (எகூ)

கோடஞ்சங் கோதையர்கள் கொங்கையினுங் சூஞ்சாரத்தும்
வேடன் சரந்துரக்கும் வேங்கடமே - சேடனெனு
மோர்பன் னகத்திடந்தா னுற்று ணிரணியனைக்
கூர்பன் னகத்திடந்தான் குன்று. (அ0)

நாரியர்தங் கூந்தலினு நாலு மருவியினும்
வேரிநறுஞ் சாந்தொழுகும் வேங்கடமே - பாருளா
ரற்பசுவர்க் கத்தா ரறிவரியார் முன்மேய்த்த
நற்பசு வர்க்கத்தார் நாடு. (அக)

மாதரார் கண்ணு மலைச்சார லுங்காமர்
வேதமார்க் கஞ்செரியும் வேங்கடமே - பாதமாம்
போதைப் படத்துவைத்தார் போர்வலைய மாற்றரசர்
வாதைப் படத்துவைத்தார் வாழ்வு. (அஉ)

எத்திக்குங் காம்பு மெயினருமா ரத்தினையே
வித்திக் கதிர்விளைக்கும் வேங்கடமே - தித்திக்குங்
காரிமா றன்பாவார் காதலித்தார் தம்பிறவி
வாரிமா றன்பாவார் வாழ்வு. (அ௩)

பாரோடு கான்யாறும் பல்களிறு நந்தவனம்
வேரோ டலைத்திர்க்கும் வேங்கடமே - காரோதஞ்
சுட்டகரு விற்படையார் தொண்டரைமீன் டேழுவகைப்
பட்டகரு விற்படையார் பற்று. (அச)

நன்காமர் வண்டினமு நால்வாய் மதகரியு
மென்கா மரமுழக்கும் வேங்கடமே - புன்காம
மேவார் கழலா ரொணதுளத்தி லென்றலைவை
பூவார் கழலார் பொருப்பு. (அரு)

பாம்புங் குளிர்சக்கின் பக்கத்தி னிற்கின்ற
வேம்பு மருத்துவக்கும் வேங்கடமே - காம்புகர
மானவனை நன்குடையா ராளாய்த் தொழுதேத்து
மானவனை நன்குடையார் வாழ்வு. (அசு)

சாரு மருவிதவழ் சாரலுஞ்செஞ் சந்தனத்தின்
வேரு மரவமுறு வேங்கடமே - நேரு
மதுகையிட வர்க்கறுத்தார் மாமலரோன் சாப
மதுகையிட வர்க்கறுத்தார் வாழ்வு. (அஎ)

மண்மட்டுத் தாழ்சுனையும் வட்டச்சி லாதலமும்
விண்மட்டுத் தாமரைசேர் வேங்கடமே - யெண்மட்டுப்
பாதமுன்னி னைந்தார் பரமபதஞ் சேர்கவென்று
போதமுன்னி னைந்தார் பொருப்பு. (அஅ)

போதா விருசுடரும் போதுதற்கு மோதுதற்கும்
வேதாவி ருன்முடியா வேங்கடமே - மாதாவின்
விக்குதனத் தக்கினியான் விம்மியழா தாட்கொண்டா
னுக்குதனத் தக்கினியான் சார்பு. (அக)

பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர்க்கும்
வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே - வாய்க்கமுதார்
வண்மைப்பே ராயிரந்தான் மன்னிருன் மாவலிபாற்
றண்மைப்பே ராயிரத்தான் சார்பு. (கo)

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியு மாதங்க
வேட்கை மறந்திசழும் வேங்கடமே - தோட்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகனை
லோகவந்த னைக்கழித்தா ரூர். (கக)

கூட்டுத் தவத்தவருங் கோளரிக ளின்றுரைகயும்
வேட்டு வரம்பொழியும் வேங்கடமே - மோட்மேதத்
தந்திக் கமலத்தார் தாம்பெறாஉம் வீடளித்தா
ருந்திக் கமலத்தா ரூர். (கஉ)

வஞ்ச மடித்திருப்பார் வாக்குங் கலேக்கோடும்
விஞ்ச மடித்திருக்கார் வேங்கடமே - கஞ்சப்
பிரமானந் தத்தான் பிரபஞ்ச மாய்த்த
பரமானந் தத்தான் பதி. (கங)

சேலஞ்சுங் கண்மடவார் தேங்குழலுங் கோங்கினமு
மேலஞ் சுவர்க்கமார் வேங்கடமே - கோலஞ்சேர்
மாரிலலங் காரத்தார் மற்றும்பல் பூணணிந்த
காரிலலங் காரத்தார் காப்பு. (கச)

கொய்யு மலர்ச்சோலைக் கொக்கும் பிணியாளர்
மெய்யும் வடுத்தவிரும் வேங்கடமே - நையுஞ்
சனனுந் தகனர் தலையிலிதோள் காய்ந்த
சினனுந் தகனர் சிலம்பு. (கரு)

நேர்க்கவலை நோயினரு நீடுசிலை வேடுவரும்
வேர்க்கவலை மூலங்கல் வேங்கடமே - கார்க்கடன்மேற்
றுண்டுங்கா லத்திறப்பார் தம்மைவிழுங் கிக்கனிவாய்
மீண்டுங்கா லத்திறப்பார் வெற்பு. (கசு)

தண்டா மணாச்சுனையிற் சாதகமும் வேடுவரும்
விண்டாரை நாடுகின்ற வேங்கடமே - தொண்டாக்கி
யேவத் தனக்குடையா ரென்னைமுன் றுளெடுத்த
கோவத் தனக்குடையார் குன்று. (௯௭)

வாழுரியுஞ் சந்தனந்தோய் மாருதமுந் தாக்குதலால்
வேழ மருப்புருகும் வேங்கடமே - கீழமர்
பஞ்சவடி காட்டினன் பாரளப்பான் போலெவர்க்குஞ்
சஞ்சவடி காட்டினன் காப்பு. (௯௮)

எவ்விடமு மாறுநோய்ந் தெல்லோரும் பல்பாம்பும்
வெவ்விடரி னிங்கியெழும் வேங்கடமே - தெவ்விடையே
மூட்டவனு கத்தனையா னுதிமறை நான்மார்க்கம்
விட்டவனு கத்தனையான் வெற்பு. (௯௯)

பாடு மதுகரமும் பச்சைத் தழைக்குடிலின்
வேடு மணமருவும் வேங்கடமே - நீடு
மகராலை யங்கடந்தார் வாழ்வசுதே வர்க்கு
மகராலை யங்கடந்தார் வாழ்வு. (௧00)

ஆதிதிரு வேங்கடமென் றுயிரம்பே ரானிடமென்
றோதிய வெண்பா வொருநூறுங் - கோதில்
குணவாள பட்டரிரு கோகனகத் தாள்சேர்
மனவாள தாசன்றன் வாக்கு. (௧0௧)

மு ற் றி ற் று.
